بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

இதழ் 29

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

5 ஸுல்கஃதா 1439 ஹிஜ்ரி கமரி 19 வஃபா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

19 ஜுலை 2018


## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا

ادْخُلُوْا فِى السِّلْمِ كَآفَّةً

وَّلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ

اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையாக கீழ்ப்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷைய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான்.

(அதிகாரம் அல் பக்கரா : 209)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**நமது இறைவனிடத்தில் அளவற்ற அற்புதங்களெல்லாம் காணப்படுகின்றன. ஆனால் உண்மையான மனத்துடனும், நம்பிக்கையோடும் அவனுக்காக ஆகி விட்டவர்களே அவற்றைக் காண்கின்றார்கள்**

**நமது சுவர்க்கம் நமது இறைவனேயாவான். நமது மேலான இன்பங்கள் அனைத்தும் நமது இறைவனிடத்தே இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனை கண்டிருக்கின்றோம். அழகனைத்தும் அவனிடத்திலே அமைந்துள்ளன. ஆகவே இச்செல்வத்தை நாம் உயிரை தியாகம் செய்து பெற நேரிட்டாலும் கண்டிப்பாகப் பெறுவதற்குத் தகுதியுள்ளதாயிருக்கிறது. மேலும் நாம் நம்மை முற்றாய் அர்ப்பணித்தால் தான் பெறமுடியும் என்றால், இவ்விலையுயர்ந்த மாணிக்கம் அவ்வாறு வாங்கத் தகுதியுள்ளதாக இருக்கின்றது**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

இறைவன் ஒவ்வொன்றின் மீதும் சக்தியுள்ளவன் என்று கருதாதவரின் பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக்கப்படும்? மேலும் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவது இயற்கை சட்டத்திற்கு மாறானது என்று தவறாக நம்பும் மனிதனுக்கு பிரச்சனைக்குரிய இக்கட்டான சமயங்களில் பிரார்த்தனை செய்ய எவ்வாறு தூண்டுதல் உண்டாகும்?

நற்பேறு பெற்றவரே! நீர் அவர்களைப் போல் ஆகி விட வேண்டாம். உமது இறைவன் அளவற்ற நட்சத்திரங்களை தூண்களின்றித் தொங்க விட்டிருக்கின்றான். அவன் வானங்களையும் பூமியையும் ஒன்றுமில்லாததிலிருந்து படைத்திருக்கின்றான். இவ்வாறிருக்க அவன் உமது பணியை செய்ய சக்தி அற்றவனாயிருக்கிறான் என்று நீர் அவனைப் பற்றி தவறான எண்ணம் கொள்கின்றீரா?☆ உமது தவறான எண்ணமே உம்மை இறைவனது உதவி கிடைக்காமல் செய்து விடும்.

நமது இறைவனிடத்தில் அளவற்ற அற்புதங்களெல்லாம் காணப்படுகின்றன. ஆனால் உண்மையான மனத்துடனும், நம்பிக்கையோடும் அவனுக்காக ஆகி விட்டவர்களே அவற்றைக் காண்கின்றார்கள். அவனது வல்லமைகள் மீது திட நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கும், அவனுக்கு உண்மையானவனாகவும், நம்பிக்கையாளனாகவும் ஆகாத மற்றவர்களுக்கும் அந்த அற்புதங்களை அவன் வெளிப்படுத்திக் காட்டுவதில்லை. எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ள இறைவன் ஒருவன் தமக்கு இருக்கிறான் என்பதனை இதுவரை அறியாதவர் எத்தகைய பேறிழந்தவராக இருக்கிறார்!

நமது சுவர்க்கம் நமது இறைவனேயாவான். நமது மேலான இன்பங்கள் அனைத்தும் நமது இறைவனிடத்தே இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனை கண்டிருக்கின்றோம். அழகனைத்தும் அவனிடத்திலே அமைந்துள்ளன. ஆகவே இச்செல்வத்தை நாம் உயிரை தியாகம் செய்து பெற நேரிட்டாலும் கண்டிப்பாகப் பெறுவதற்குத் தகுதியுள்ளதாயிருக்கிறது. மேலும் நாம் நம்மை முற்றாய் அர்ப்பணித்தால் தான் பெறமுடியும் என்றால், இவ்விலையுயர்ந்த மாணிக்கம் அவ்வாறு வாங்கத் தகுதியுள்ளதாக இருக்கின்றது.

இழப்பிற்குரியோரே! உங்களுக்கு வளம் தரக்கூடிய இந்த ஊற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உயிரோட்டமுள்ள ஒரு நீர் ஊற்றாகும். இது உங்களை காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை உங்கள் இதயங்களில் நான் எவ்வாறு பதிய வைப்பேன். உங்களின் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை மக்களெல்லாரும் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசைக் கொட்டி வீதிகளில் அறிவிப்பு செய்வேன்? மக்கள் செவிகளெல்லாம் கேட்பதற்கான சிகிச்சையை நான் எம்மருந்தைக் கொண்டு செய்வேன்?

நீங்கள் இறைவனுக்காக ஆகிவிட்டால் அவன் உங்களுடையவனாய் ஆகிவிடுவான் என்பதை நிச்சமயாக அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கையில் இறைவன் உங்களுக்காக விழித்துக் கொண்டிருப்பான். நீங்கள் உங்கள் பகைவர்களை குறித்து கவனமின்றி இருக்கும்போது அவன் அவர்களை கவனித்துக் வருவான். மேலும் உங்களுக்கு விரோதமான அவர்களது சதி திட்டங்களையெல்லாம் முறியடிப்பான். உங்கள் இறைவன் எத்தகைய வல்லமைமிக்கவன் என்பதை நீங்கள் இதுவரை அறிந்ததில்லை. நீங்கள் இதனை அறிந்திருந்தால், இவ்வுலகிற்காக பெரும் கவலை கொள்ளக்கூடிய நிலை ஒரு நாளும் உங்களுக்கு வராது.

தன்னிடம் ஒரு செல்வக் குவியலைக் கொண்டுள்ள ஒருவன் அதிலிருந்து ஒரு பைசாவை இழந்து விட்டால் அதற்காக அவன் கண்ணீர் வடிப்பானா? கூச்சல் போடுவானா? அல்லது தன்னை மாய்த்துக் கொள்வானா? இவ்வாறிருக்க இறைவன் உங்களது ஒவ்வொரு தேவையின் போதும் உங்களுக்கு எப்போதும் வழங்கக்கூடிய கருவூலமாக இருக்கிறான் என்பதனை நீங்கள் அறிந்திருந்தால் நீங்கள் உலகிற்காக தம்மை இழந்த நிலையில் மயங்கி இருப்பானேன்?

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஜுமுஆவின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள். அதில் ஒரு நேரம் வருகிறது. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிம் தொழுது கொண்டிருந்தால் அப்போது அவர் எந்த துஆவை வேண்டினாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் என்ன நன்மையை வேண்டுகிறாரோ அதை அவன் அவர்களுக்கு வழங்குகின்றான். ஜுமுஆவின் குத்பாவும் கூட தொழுகையின் ஒரு பகுதியே ஆகும். எனவே துஆ ஏற்றுக் கொள்ளப்படும் அந்த நேரமும் இதில் அடங்கும்.**

**ஜுமுஆவின் நாளிற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலேயொழிய புரியும் திறனை பெற்றிருக்கின்ற ஒவ்வோர் ஆணுக்கும் அதை தொழுவது அவசியமாக்கப்பட்டுள்ளது.**

**தொழுகையில் ஒவ்வொருவரும் அவரவரது சிந்தனைகள் மற்றும் தேவைகளுக்கேற்ப துஆ செய்கின்றனர். சிலர் எவ்வாறு இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தொழுகின்றார்கள்; ஆனால் துஆ செய்வதற்கான சிறப்பான தூண்டுதல்கள் எதுவும் அவர்களிடம் இருப்பதில்லை. ஏதோ தொழுது விட்டோம். அதில் சொல்லப்பட்டுள்ள வாசகங்களை ஓதி விட்டோம். அது மட்டும் போதுமானது என்று இருந்து விடுகின்றனர். அவர்களுக்கு துஆவின் முக்கியத்துவம் தெரிவதில்லை. துஆ என்றால் என்ன? என்பதைப் பற்றி அறியாதவர்களுக்கு அவர்கள் உணரும் வகையில் இன்று ரமலானின் கடைசி ஜுமுஆவில் நான் சில துஆக்களை எடுத்துக் கூறலாம் என்று நினைக்கின்றேன். மேலும் ஜமாஅத் அளவில் நம்முடைய துஆக்களையும் விருப்பங்களையும் இறைவன் முன் எடுத்து வைக்க வேண்டும். மேலும் தொழுகையில் ஒட்டுமொத்த அளவில் இந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக சிறப்பான முறையில் துஆ செய்யுங்கள். இந்த துஆக்களில் நான் திருக்குர்ஆனிலிருந்து சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில துஆக்களும், இன்னும் சில பொதுவான துஆக்களும் இருக்கின்றன.**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**15 ஜுன் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஜுமுஆவின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்.

அதில் ஒரு நேரம் வருகிறது. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிம் தொழுது கொண்டிருந்தால் அப்போது அவர் எந்த துஆவை வேண்டினாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் என்ன நன்மையை வேண்டுகிறாரோ அதை அவன் அவர்களுக்கு வழங்குகின்றான்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஜுமுஆ, பாபு ஸாஅத் அல்லதி ஃபீ யவ்முல் ஜுமுஆ ஹதீஸ் எண் 935)

இதை தெளிவுபடுத்தும் வகையில் ஒரு சிலர் இதனையும் கூறுகின்றனர். அதாவது ஜுமுஆவின் குத்பாவும் கூட தொழுகையின் ஒரு பகுதியே ஆகும். எனவே துஆ ஏற்றுக் கொள்ளப்படும் அந்த நேரமும் இதில் அடங்கும்.

எவ்வாறிருப்பினும், ஜுமுஅவின் நாளிற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தலேயொழிய புரியும் திறனை பெற்றிருக்கின்ற ஒவ்வொரு ஆணுக்கும் அதை தொழுவது அவசியமாக்கப்பட்டுள்ளது.

(சுனன் அபீதாவூது, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண் 1067)

தொழுகையில் ஒவ்வொருவரும் அவரவரது சிந்தனைகள் மற்றும் தேவைகளுக்கேற்ப துஆ செய்கின்றனர். சிலர் எவ்வாறு இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தொழுகின்றார்கள்; ஆனால் துஆ செய்வதற்கான சிறப்பான தூண்டுதல்கள் எதுவும் அவர்களிடம் இருப்பதில்லை. ஏதோ தொழுது விட்டோம். அதில் சொல்லப்பட்டுள்ள வாசகங்களை ஓதி விட்டோம். அது மட்டும் போதுமானது என்று இருந்து விடுகின்றனர். அவர்களுக்கு துஆவின் முக்கியத்துவம் தெரிவதில்லை. எனவே துஆ என்றால் என்ன? என்பதைப் பற்றி அறியாதவர்களுக்கு அவர்கள் உணரும் வகையில் இன்று ரமலானின் கடைசி ஜுமுஆவில் நான் சில துஆக்களை எடுத்துக் கூறலாம் என்று நினைக்கின்றேன். மேலும் ஜமாஅத் அளவில் நம்முடைய துஆக்களையும் விருப்பங்களையும் இறைவன் முன் எடுத்து வைக்க வேண்டும். மேலும் தொழுகையில் ஒட்டுமொத்த அளவில் இந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக சிறப்பான முறையில் துஆ செய்யுங்கள்.

இந்த துஆக்களில் நான் திருக்குர்ஆனிலிருந்து சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில துஆக்களும், இன்னும் சில பொதுவான துஆக்களும் இருக்கின்றன.

சில திருக்குர்ஆனிய மற்றும் சுன்னத்தான துஆக்களை நான் ஓதும்போது யாருக்கு அவை நினைவில் உள்ளதோ அதை அவர்கள் உள்ளத்தில் கூறவும். அல்லது என்னுடன் சேர்ந்து எவர்களால் அதை உள்ளத்தில் ஓத முடியுமோ அவர்கள் அவ்வாறு செய்யவும். ஒவ்வொரு துஆவிற்குப் பிறகும் ஆமீன் என்று கூறவும். அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வானாக.

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

முதலில் திருக்குர்ஆனின் துஆக்கள்:

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. (2:202)

رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّتَوَفَّنَا مُسْلِمِيْنَ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு பொறுமையினை வழங்குவாயாக. மேலும் (உனக்கே) கட்டுப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்ற நிலையிலே எங்களுக்கு நீ மரணத்தை தந்தருள்வாயாக. (7:127)

اَللّٰهُمَّ رَبَّنَآ اَنْزِلْ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَآءِ تَكُوْنُ لَنَا عِيْدًا لِّاَوَّلِنَا وَاٰخِرِنَا وَاٰيَةً مِّنْكَ وَارْزُقْنَا وَاَنْتَ خَيْرُ الرّٰزِقِيْنَ

அதாவது அல்லாஹ்வே! எங்கள் இறைவனே! எங்களுள் முன்னவர்க்கும், எங்களுள் பின்னவர்க்கும் பெருநாளாக (அமைவதற்காக)வும், உன்னிடமிருந்துள்ள ஓர் அடையாளமாகவும் இருக்கக்கூடிய (உணவுகள் நிரம்பிய) தட்டை வானிலிருந்து எங்களுக்கு இறக்கி வைப்பாயாக. (5:115)

رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۔ رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ

அதாவது எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள் என்று (கூறி) நம்பிக்கையின் பால் அழைக்கும் ஓர் அழைப்பவரின் குரலை நிச்சயமாக நாங்கள் செவியேற்றோம். எனவே, நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். (ஆகவே) எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. (3:194)

رَبَّنَآ اٰمَنَّا بِمَآ اَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُوْلَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِيْنَ

அதாவது எங்கள் இறைவா! நீ இறக்கியதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இத்தூதரை பின்பற்றுகிறோம். எனவே நீ எங்களை உண்மைக்கு சாட்சி சொல்பவர்களுடன் எங்கள் பெயரை பதிவு செய்வாயாக. (3:54)

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டிய பிறகு எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ

என் இறைவா! நீ எனக்கு உன்னிடமிருந்து தூய்மையான சந்ததியைத் தந்தருள்வாயாக. நிச்சயமாக நீ வேண்டுதலை ஏற்றுக் கொள்பவனாவாய். (3:39)

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக. மேலும் எங்களை இறையச்சமுடையவர்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்குவாயாக. (25:75)

رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰهُ وَاَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ ۔ اِنِّيْ تُبْتُ اِلَيْكَ وَاِنِّيْ مِنَ الْمُسْلِمِيْنَ

என் இறைவா! நீ எனக்கும் என் பெற்றோருக்கும் அருளிய உனது அருளுக்கு நான் நன்றி செலுத்தவும், உனக்கு விருப்பமான நற்செயல்களை நான் செய்யவும், நீ எனக்கு அருள் புரிவாயாக. மேலும் எனக்காக என் சந்ததிகளை நல்லவர்களாக ஆக்குவாயாக. நிச்சயமாக நான் உன்னிடமே திரும்புகிறேன். நிச்சயமாக நான் (உனக்குக்) கீழ்ப்படிந்து நடப்பவர்களைச் சேர்ந்தவனாவேன். (46:16)

رَبِّ هَبْ لِيْ مِنَ الصّٰلِحِيْنَ

அதாவது என்னுடைய இறைவா! நீ எனக்கு நல்லடியார்களை வாரிசாக்குவாயாக. (அஸ் ஸஃப்பாத்:101)

رَبِّ اِنِّيْ لِمَآ اَنْزَلْتَ اِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيْرٌ

அதாவது என் இறைவா! நிச்சயமாக எனக்கு நன்மையிலிருந்து நீ எதை வழங்கினாலும் அதனை நான் இரப்பவனாக உள்ளேன். (28:25)

رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰهُ وَاَدْخِلْنِيْ بِرَحْمَتِكَ فِيْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ

அதாவது நீ எனக்கும் எனது பெற்றோர்களுக்கும் செய்த உன் அருட்கொடைக்கு நான் நன்றி செலுத்துவதற்கும், நீ திருப்தியடையக்கூடிய பொருத்தமான செயலை நான் செய்வதற்கும் நீ எனக்கு வாய்ப்பளித்து உன் கருணையால் என்னை உன் அடியார்களுடன் சேர்ப்பாயாக. (27:20)

رَبِّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزٰتِ الشَّيٰطِيْنِ ۔ وَاَعُوْذُ بِكَ رَبِّ اَنْ يَّحْضُرُوْنِ

அதாவது நீர் கூறுவீராக. என் இறைவா! கிளர்ச்சியாளர்களுடைய தீங்கிலிருந்து நான் பாதுகாப்பு தேடுகின்றேன். என் இறைவா! அவர்கள் என் முன் வருவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன். (23:98,99)

رَبِّ زِدْنِيْ عِلْمًا

என் இறைவா! எனக்கு அறிவை வளரச் செய்வாயாக. (20:115)

رَبِّ اشْرَحْ لِيْ صَدْرِيْ ۔ وَيَسِّرْ لِيْٓ اَمْرِيْ ۔ وَاحْلُلْ عُقْدَةً مِّنْ لِّسَانِيْ ۔ يَفْقَهُوْا قَوْلِيْ

அதாவது என் இறைவா! என் உள்ளத்தை விரிவுபடுத்துவாயாக. என் பணியை எனக்கு எளிதாக்குவாயாக. என் பேச்சிலுள்ள திக்கலை அகற்றுவாயாக. (அவ்வாறாயின்) அவர்கள் என் பேச்சை (எளிதாகப்) புரிந்து கொள்வர். (20:26–29)

رَبَّنَآ اٰتِنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً وَّهَيِّئْ لَنَا مِنْ اَمْرِنَا رَشَدًا

அதாவது எங்கள் இறைவா! நீ எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக.மேலும் எங்களது விஷயத்தில் நேர்வழியை எளிதாக்கி தருவாயாக. (18:11)

رَبِّ اَدْخِلْنِيْ مُدْخَلَ صِدْقٍ وَّ اَخْرِجْنِيْ مُخْرَجَ صِدْقٍ وَّاجْعَلْ لِّيْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا

அதாவது எங்கள் இறைவா! நீ நல்ல முறையில் என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் வகையில் (மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாளராகவும் விளங்கும் ஒருவரை வழங்குவாயாக. (17:25)

رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيٰنِيْ صَغِيْرًا

அதாவது என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது என்னை வளர்த்தது போல் நீ எனது பெற்றோரிடம் கருணை காட்டுவாயாக. (17:25)

رَبِّ هَبْ لِيْ حُكْمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ ۔ وَاجْعَلْ لِّيْ لِسَانَ صِدْقٍ فِي الْاٰخِرِيْنَ ۔ وَاجْعَلْنِيْ مِنْ وَّرَثَةِ جَنَّةِ النَّعِيْمِ

அதாவது என் இறைவா! எனக்கு ஞானத்தை வழங்கி என்னை நல்லோருடன் சேர்த்து வைப்பாயாக. பின் வருவோருடையே என்றென்றும் உண்மையான (நிலையான) புகழை எனக்கு வழங்குவாயாக. மேலும் அருட்கொடைகளை கொண்ட தோட்டத்தின் வாரிசுகளை சார்ந்தவர்களாக எங்களை ஆக்குவாயாக. (26:84–86)

رَبِّ اِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ فَاغْفِرْ لِيْ

அதாவது எங்கள் இறைவா! நிச்சயமாக நான் எனது நஃப்ஸின் மீது அநீதியிழைத்து விட்டேன். ஆகவே என்னை மன்னித்தருள்வாயாக.

رَبَّنَآ اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

அதாவது எங்கள் இறைவா! எங்கள் ஒளியை முழுமையாக்கி எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீ எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவாய். நீ எதை விரும்புகின்றாயோ அதை செய்வதற்கு நிரந்தரமான ஆற்றல் உடையவனாவாய். (66:9)

رَبَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ

அதாவது எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்களை மன்னித்து எங்கள் மீது கருணை காட்டுவாயாக. நீ கருணை காட்டுபவருள் சிறந்தவனாவாய். (2:210)

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

அதாவது எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டவாளிகளை சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

رَبَّنَا لَا تَجْعَلْنَا مَعَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ

அதாவது எங்கள் இறைவா! எங்களை அநீதியிழைக்கும் சமுதாயத்தை சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக. (7:48)

رَبِّ لَا تَذَرْنِيْ فَرْدًا وَّاَنْتَ خَيْرُ الْوٰرِثِيْنَ

அதாவது என் இறைவா! என்னை தனித்தவனாக விட்டுவிடாதிருப்பாயாக. வாரிசாக இருப்பவர்களுள் நீயே மிகச் சிறந்தவனாவாய். (21:90)

قُلْ رَّبِّ اِمَّا تُرِيَنِّيْ مَا يُوْعَدُوْنَ - رَبِّ فَلَا تَجْعَلْنِيْ فِي الْقَوْمِ الظّٰلِمِيْنَ

அதாவது என் இறைவா! அவர்களிடத்து வாக்களிக்கப்படுவதை நீ என் வாழ்நாளிலேயே காண்பிப்பதாயின் நீ அநீதியிழைக்கும் சமுதாயத்தின் சார்ந்தவனாக ஆக்கி விடாதிருப்பாயாக. (23;94,95)

رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّعِلْمًا فَاغْفِرْ لِلَّذِيْنَ تَابُوْا وَاتَّبَعُوْا سَبِيْلَكَ وَقِهِمْ عَذَابَ الْجَحِيْمِ - رَبَّنَا وَاَدْخِلْهُمْ جَنّٰتِ عَدْنِ ِ الَّتِيْ وَعَدْتَّهُمْ وَمَنْ صَلَحَ مِنْ اٰبَآئِهِمْ وَاَزْوَاجِهِمْ وَذُرِّيّٰتِهِمْ - اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ - وَقِهِمُ السَّيِّاٰتِ - وَمَنْ تَقِ السَّيِّاٰتِ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمْتَهٗ - وَذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ

அதாவது எங்கள் இறைவா! நீ (உனது) கருணையாலும் அறிவாலும் எல்லாப் பொருள்களையும் சூழ்ந்து நிற்கிறாய். எனவே, நீ கழிவிரக்கங் கொண்டு உன் வழியைப் பின்பற்றுபவர்களை மன்னித்து நரக தண்டனையிலிருந்து அவர்களை காப்பாற்றுவாயாக.

எங்கள் இறைவா! நீ அவர்களையும், அவர்களின் மூதாதையர்களையும், அவர்களின் மனைவியர்கள், அவர்களின் குழந்தைகள் ஆகியவர்களுள் நல்லவர்களையும் நீ அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ள நிலையான தோட்டங்களில் நுழையச் செய்வாயாக. நிச்சயமாக நீ வல்லமையுள்ளவனும் ஞானமிக்கவனும் ஆவாய். நீ அவர்களை தீமையிலிருந்து காப்பாற்றுவாயாக. அந்நிலையில் நீ தீமைகளிலிருந்து காப்பாற்றுகின்றாயோ அவருக்கு நிச்சயமாக நீ கருணை காட்டி விட்டாய். இது மாபெரும் வெற்றியாகும். (23:8–10)

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ

அதாவது எங்கள் இறைவா! எங்களையும் எங்களுக்கு முன்னர் நம்பிக்கை கொண்ட சகோதரர்களையும் மன்னித்தருள்வாயாக. மேலும் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு எதிராக எங்கள் உள்ளங்களில் எத்தகைய வெறுப்பும் ஏற்படாதிருக்கச் செய்வாயாக. எங்கள் இறைவா! நிச்சயமாக நீ அதிகமாக பரிவு காட்டுபவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவாய். (59:11)

رَبِّ اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ مُؤْمِنًا وَّلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ - وَلَا تَزِدِ الظّٰلِمِيْنَ اِلَّا تَبَارًا

அதாவது என் இறைவா! என்னுடைய பெற்றோரையும் என் வீட்டில் நம்பிக்கை கொண்டவராக நுழைபவரையும், நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் மன்னிப்பாயாக. அநீதியிழைப்பவர்களுக்கு அழிவையே அதிகரிப்பாயாக. (71:29)

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ - اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

அதாவது எங்கள் இறைவா! நீ உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு வாக்களித்தவற்றை (எல்லாம்) எங்களுக்கு தருவாயாக. மேலும் மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை. (3:195)

اَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الْغٰفِرِيْنَ

அதாவது நீ எங்கள் உதவியாளனாக இருக்கின்றாய். எனவே நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டுவாயாக. மன்னிப்பவர்களுள் எல்லாரையும் விட நீயே சிறந்தவனாவாய். (7:156)

رَبَّنَا اصْرِفْ عَنَّا عَذَابَ جَهَنَّمَ اِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا

எங்கள் இறைவா! எங்களிடமிருந்து நரகத் தண்டனையை அகற்றி விடுவாயாக; ஏனெனில் அதன் தண்டனை ஒரு பெரும் வேதனையாகும். (25:66)

رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களுக்கு எங்களை பாவங்களை மன்னித்தருள்வாயாக. எங்களை நரக தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. (3:17)

رَبِّ اجْعَلْنِيْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِيْ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ - رَبَّنَا اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ

என் இறைவா! என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக ஆக்குவாயாக.

எங்கள் இறைவா! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. என் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர்கள் எல்லாருக்கும் நீ மன்னிப்பை வழங்குவாயாக. (14:41,42)

رَبِّ نَجِّنِيْ وَاَهْلِيْ مِمَّا يَعْمَلُوْنَ

அதாவது என் இறைவா! என்னையும் என் குடும்பத்தினரையும் அவர்களது செயல்களிலிருந்து காப்பாற்றுவாயாக. (26:170)

رَبِّ اِنَّ قَوْمِيْ كَذَّبُوْنِ - فَافْتَحْ بَيْنِيْ وَبَيْنَهُمْ فَتْحًا وَّنَجِّنِيْ وَمَنْ مَّعِيَ مِنَ الْمُؤْمِنِيْنَ

அதாவது என் இறைவா! என் சமுதாயத்தினர் என்னை பொய்யாக்கி விட்டனர். நீ எனக்கும் அவர்களுக்கும் இடையில் இறுதியான தீர்ப்பு வழங்கி என்னையும் என்னுடன் உள்ள நம்பிக்கை கொண்டவர்களையும் (எதிரிகளின் தீங்கிலிருந்து) காப்பாற்றுவாயாக. (26:118,119)

رَبِّ انْصُرْنِيْ عَلَى الْقَوْمِ الْمُفْسِدِيْنَ

அதாவது என் இறைவா! இந்த குழப்பக்காரர்களான சமுதாயத்திற்கு எதிராக எனக்கு உதவி செய்வாயாக.(29:31)

اَنِّيْ مَغْلُوْبٌ فَانْتَصِرْ

அதாவது நிச்சயமாக நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன். எனவே நீ (எனக்கு) உதவி செய்(ய வரு)வாயாக. (54:11)

رَبَّنَا لَا تُؤَاخِذْنَآ اِنْ نَّسِيْنَآ اَوْ اَخْطَاْنَا - رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ اِصْرًا كَمَا حَمَلْتَهٗ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ وَاعْفُ عَنَّا وَاغْفِرْ لَنَا وَارْحَمْنَآ اَنْتَ مَوْلٰىنَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

அதாவது எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களை தண்டிக்காதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நீ பாரத்தை சுமத்தியது போன்று எங்கள் மீதும் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் சுமக்க இயலாத பாரத்தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக. எங்களை பொறுத்துருள்வாயாக. எங்கள் மீது கருணை காட்டுவாயாக. நீ எங்களது எஜமானன். ஆகவே நிராகரிக்கும் கூட்டத்திற்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக. (2:287)

رَبَّنَآ أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத்தன்மையை தந்தருள்வாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (2:251)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَإِسْرَافَنَا فِيْٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

அதாவது எங்கள் இறைவா! எங்கள் பாவங்களையும், எங்களின் விவகாரங்களிலுள்ள வரம்பு மீறுதல்களையும் மன்னிப்பாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. நிரகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَبَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَأَنْتَ خَيْرُ الْفَاتِحِيْنَ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கும் எங்கள் சமுதாயத்திற்கும் இடையில் உண்மையான தீர்ப்பு வழங்குவாயாக. மேலும் தீர்ப்பு வழங்குபவர்களுள் நீயே மிகச் சிறந்தவன். (7:90)

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلْقَوْمِ الظّٰلِمِيْنَ وَنَجِّنَا بِرَحْمَتِكَ مِنَ الْقَوْمِ الْكٰفِرِيْنَ

அதாவது எங்கள் இறைவா! அநீதியிழைக்கின்ற மக்களுக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்காதிருப்பாயாக. உன் அருளின் மூலம் நிராகரிக்கின்ற மக்களிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக.(10:86,87)

رَبِّ انْصُرْنِيْ بِمَا كَذَّبُوْنِ

அதாவது என் இறைவா! அவர்கள் என்னை பொய்ப்படுத்துவதனால் நீ எனக்கு உதவி செய்வாயாக. (23:27)

رَبِّ ابْنِ لِيْ عِنْدَكَ بَيْتًا فِي الْجَنَّةِ وَنَجِّنِيْ مِنْ فِرْعَوْنَ وَعَمَلِهٖ وَنَجِّنِيْ مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ

அதாவது என் இறைவா! உன்னிடத்திலே தோட்டத்தில் ஒரு வீட்டை எனக்காக நீ கட்டுவாயாக. ஃபிர்அவ்னிடமிருந்தும் அவனது செயலிருந்தும் என்னை காப்பாற்றுவாயாக. அநீதி இழைக்கும் அவனது சமுதாயத்திடமிருந்து என்னை காப்பாற்றுவாயாக. (66:12)

சில ஹதீஸ் துஆக்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இந்த துஆ அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னார் இந்த துஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள்.

அல்லாஹ்வே! என்னுடைய தவறுகளை மன்னிப்பாயாக. என்னுடைய எல்லா விவகாரங்களிலும் எனது அறியாமை மற்றும் அறிவீனம் மற்றும் எனது வரம்பு மீறுதல் ஆகியவற்றின் தீங்கிலிருந்து என்னை பாதுகாப்பாயாக. என்னை விட நன்றாக அறிந்தவனாக இருக்கின்ற நீயே அவற்றின் எல்லா நஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பு வழங்குவாயாக.

அல்லாஹ்வே! எனது தவறுகளை மன்னிப்பாயாக. நான் தெரிந்தும் தெரியாமலும் கேலி செய்யும் விதத்தில் செய்த அனைத்து தவறுகளையும் மன்னிப்பாயாக. என்னிடத்திலிருந்து வெளிப்பட்ட அல்லது தற்போது வரை வெளிப்படாத மற்றும் மறைவான முறையில் என்னிடமிருந்து வெளிப்பட்ட மற்றும் வெளிப்படையாகவே நான் செய்த அனைத்து தவறுகளையும் மன்னிப்பாயாக. நீயே முன்னேறச் செய்பவனும், பின் தங்கச் செய்பவனும் ஆவாய். நீயே எல்லாவற்றிற்கும் ஆற்றல் உடையவனாவாய்.

(சஹீஹ் புஹாரி, கிதாபுத் தஃவாத், பாபு கவ்லுன் நபி (ஸல்) ஹதீஸ் எண் 6398)

اَللّٰهُمَّ لَكَ أَسْلَمْتُ وَعَلَيْكَ تَوَكَّلْتُ وَبِكَ آمَنْتُ وَإِلَيْكَ أَنَبْتُ وَبِكَ خَاصَمْتُ وَإِلَيْكَ حَاكَمْتُ فَاغْفِرْ لِيْ مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ ـ

அல்லாஹ்வே! நான் என்னை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். உன்மீது தவக்கல் வைக்கின்றேன். உன்மீது தவக்குல் கொள்கின்றேன். மேலும் நான் உன் பக்கம் குனிகின்றேன். உன்னுடைய உதவியுடன் எதிரில் இருப்பவர்களுடன் வாதிடுகின்றேன். உன்னிடமே என்னுடைய வழக்குகளை எடுத்து வைக்கின்றேன். நீ எனது முந்தைய, பிந்தைய மற்றும் மறைவான, வெளிப்படையான எல்லா பாவங்களையும் மன்னிப்பாயாக. நீயே முதலும் முடிவுமாக இருக்கிறாய். உன்னைத் தவிர வேறு வணக்கத்திறகுரியன் இல்லை.

(சஹீஹ் புஹாரி, கிதாபுத் தஃவாத், பாபுத் துஆ இதா அனப்து பில்லைல் ஹதீஸ் எண் 6317)

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوْءُ لَكَ بِذَنْبِيْ فَاغْفِرْ لِيْ فَإِنَّهٗ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ

அல்லாஹ்வே! நீ எனது இறைவனாவாய். உன்னைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை. நீ என்னை படைத்தாய். நான் உனது அடியானாவேன். எனது சக்திக்குட்பட்டவாறு நான் உன்னிடம் செய்த ஒப்பந்தத்திலும் வாக்குறுதியிலும் நிலைத்துள்ளேன். நான் என்னுடைய செயல்களின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன். என்மீது நீ செய்துள்ள உனது அருள்களுக்கு நான் சாட்சி பகர்கின்றேன். நான் செய்த எனது பாவங்களை ஒப்புக் கொள்கின்றேன். என்னை மன்னித்தருள்வாயாக. உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவன் வேறு எவனும் இல்லை.

(சஹீஹ் புஹாரி, கிதாபுத் தஃவாத், பாபு அஃப்ஸலுல் இஸ்திஃபார் ஹதீஸ் எண் 6306)

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ قَلْبٍ لَا يَخْشَعُ وَمِنْ دُعَاءٍ لَا يُسْمَعُ وَمِنْ نَفْسٍ لَا تَشْبَعُ وَمِنْ عِلْمٍ لَا يَنْفَعُ ـ أَعُوْذُ بِكَ مِنْ هٰؤُلَاءِ الْأَرْبَعِ

அல்லாஹ்வே! நான் உன்னிடம் பணிவும், உருக்கமும் இல்லாத உள்ளத்திலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். ஒப்புக் கொள்ளப்படாத துஆக்களிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். போதுமென்ற மனப்பான்மையை கொண்டிராத நஃப்ஸிலிருந்தும், பயன் தராத கல்வியிலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன். இந்த நான்கு விஷயங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.

(சுனன் திர்மிதி, அப்வாபுத் தஃவாத், ஹதீஸ் எண் 3482, பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِيْ عَلٰى دِيْنِكَ ـ

உள்ளங்களை புரட்டுபவனே! என்னுடைய உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் கதர், ஹதீஸ் எண் 2140)

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

அல்லாஹ்வே! நான் உன்னிடம் நேர்வழி, இறையச்சம், தூய்மை மற்றும் தன்னிறைவை வேண்டுகிறேன்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் கத்ர், அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஹுதா.... ஹதீஸ் எண் 3489)

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன்மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் நாங்கள் அவர்களின் விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(சுனன் அபீதாவூது, கிதாபுல் வித்ர், பாபு மா யகூலுர் ரஜுலு இதா ஹாஃப கவ்மா, ஹதீஸ் எண் 1537)

اللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ حُبَّكَ وَ حُبَّ مَن يُّحِبُّكَ وَالْعَمَلَ الَّذِيْ يُبَلِّغُنِيْ حُبَّكَ۔ اَللّٰهُمَّ اجْعَلْ حُبَّكَ اَحَبَّ اِلَيَّ مِنْ نَفْسِيْ وَاَهْلِيْ وَمِنَ الْمَآءِ الْبَارِدِ۔

என்னுடைய அல்லாஹ்வே! நான் உன்னிடம் உன்னுடைய அன்பை வேண்டுகின்றேன். உன்னை நேசிக்கின்றவர்களின் அன்பை வேண்டுகின்றேன். மேலும் உன்னுடைய அன்பை பெற்றுத் தருகின்ற பணியை வேண்டுகின்றேன். என்னுடைய இறைவா! எனக்கு உன்மீதான அன்பனாது, என்னுடைய உயிர், குடும்பம், குளிர்ந்த தண்ணீர் ஆகியவற்றை விட அதிகமாக அன்பிற்குரியதாக ஆக்கி வைப்பாயாக.

(சுனன் திர்மிதி, அப்வாபுத் தஃவாத், பாபு துஆ தாவூத், அல்லஹும்ம இன்னி அஸ்அலுக ஹுப்பக்க... ஹதிஸ் எண் 3490)

ஒரு நீண்ட துஆ. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மூலமாக அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்யக் கேட்டேன்.

அல்லாஹ்வே! உன்னுடைய சிறப்பான கருணையை வேண்டுகின்றேன். அதன் மூலமாக நீ எனது உள்ளத்திற்கு நேர்வழி வழங்குவாயாக. எனது பணியை சரி செய்வாயாக. என்னுடைய சீர்குலைந்த பணிகளை சரி செய்வாயாக.

என்னோடு தொடர்பு வைத்திருப்பவர்களுக்கு உயர்வு வழங்குவாயாக. உன்னுடைய கருணையின் மூலமாக எனது அமலை தூய்மையாக்குவாயாக. மேலும் எனக்கு நேர்வழி மற்றும் ஹிதாயத்தை அறிவிப்பாயாக. நான் எந்த பொருட்களை விரும்புகின்றேனோ அவை எனக்கு கிடைக்கவும் அருள் செய்வாயாக. ஆம்! அத்தகைய ஒரு சிறப்பான அருளை வழங்குவாயாக. அதன் மூலம் என்னுடைய எல்லா தீமைகளிலிருந்தும் நான் காப்பாற்றப்பட வேண்டும். மேலும் அல்லாஹ்வே! எனக்கு நீ எத்தகைய நிரந்தரமான ஈமானையும், உறுதியையும் வழங்க வேண்டும் என்றால் அதற்குப் பிறகு மறுப்பதற்கான சந்தர்ப்பமே கிடைக்கக் கூடாது.

நீ எனக்கு ஒரு சிறப்பான அருளை வழங்குவாயாக. அதன் மூலமாக எனக்கு இவ்வுலகம் மற்றும் மறுஉலகத்தினுடைய உன்னுடைய அற்புதங்களை பெறும் நல்வாய்ப்பு கிடைக்கத்தக்க அருளை நான் பெற வேண்டும்.

அல்லாஹ்வே! நான் உன்னிடம் எனது எல்லா முடிவுகளிலும் வெற்றியை விரும்புகின்றேன். மேலும் ஷஹீதுகளைப் போன்ற விருந்தோம்பலையும் மற்றும் நற்பேறு உடையவர்களின் வாழ்வையும் எதிரிகளின் மீது வெற்றியையும் உதவியையும் விரும்புகின்றேன்.

எஜமானனே! நான் என்னுடைய தேவைகளை எடுத்துக் கொண்டு உன் முன்னால் வந்து விட்டேன். என்னுடைய சிந்தனைகளில் குறை இருந்தாலும், என்னுடைய திட்டங்கள் பலவீனமானதாக இருந்தாலும் கூட உன்னுடைய கருணையின் தேவையுள்ளவனாக நான் உள்ளேன்.

ஆகவே, எல்லா விவகாரங்களிலும் தீர்ப்பு வழங்குபவனே! மேலும் உள்ளங்களுக்கு நிம்மதி வழங்குபவனே! நான் உன்னிடம் கேட்கின்றேன். அதாவது எவ்வாறு நீ பரந்து விரிந்த கடல்களிலிருந்து மனிதர்களை காப்பாற்றுகின்றாயோ அவ்வாறே என்னை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. அழிவின் குரலையும், மண்ணறையின் குழப்பத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.

என்னுடைய எஜமானனே! என்னுடைய துஆவை கேட்பதன் பக்கம் என் சிந்தனை செல்லவில்லையோ, மேலும் எந்த விஷயத்தை நான் கேட்க விட்டுவிட்டேனோ, மேலும் நான் எந்த நன்மையின் பக்கம் கவனமற்றவனாக இருந்து விட்டேனோ அவற்றை நான் உன்னிடம் வேண்டுகின்றேன். ஆனால் நீயோ உன்னுடைய படைப்பினங்களில் எவருக்கு அந்த நன்மையை வாக்களித்துள்ளாயோ அல்லது உன்னுடைய அடியார்களில் எவருக்கு நீ அந்த நன்மைகளை வழங்க இருக்கின்றாயோ அத்தகைய எல்லா நன்மைகளையும் நான் உன்னிடம் வேண்டுகின்றேன்.

எல்லா உலகங்களின் இறைவனே! நான் உன்னுடைய கருணையை கொண்டு உன்னிடம் அந்த நன்மையை வேண்டுகின்றேன்.

அல்லாஹ்வே! உறுதியான தொடர்பு வைத்துள்ள மற்றும் நேர்வழி மற்றும் ஹிதாயத்திற்கு உரிமையாளனே! மறுமை நாளில் நான் உன்னிடம் பாதுகாப்பை வேண்டுகின்றேன். மேலும் அந்த நிரந்தரமான உலகில் உன்னிடம் சுவர்க்கத்தை வேண்டுகின்றேன். உன்னுடைய சந்நிதானத்தில் வருகின்ற இறைநெருக்கம் பெற்ற அடியார்களுடனும், குனிபவர்களுடனும். சிரம்பணிபவர்களுடனும், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கூடியவர்களுடனும் என்னை நீ சுவர்க்கத்தில் ஒன்றாக வைத்திருப்பாயாக. நிச்சயமாக நீ மிகவும் கருணையும் அன்பும் செலுத்தக் கூடியவனாவாய். நிச்சயமாக நீ எதை விரும்புகின்றாயோ அதை செய்கின்றாய்.

அல்லாஹ்வே! எங்களை தானும் வழிகெட்டு பிறரையும் வழிகெடுப்பவர்களாக அல்லாமல் நேர்வழி காட்டக்கூடிய வழிகாட்டியாக ஆக்குவாயாக. உன்னுடைய அன்பிற்குரியவர்கள் மற்றும் நண்பர்களுக்காக எப்போதும் நாங்கள் அமைதியின் தூதாகவும், உன்னுடைய எதிரிகளுக்கு போரின் அடையாளமாகவும், உன்னுடைய அன்பினால் நல்லறங்கள் செய்பவர்களாகவும், உன்மீது கொண்ட அன்பினால் அன்பு கொள்பவர்களாகவும், உன்னுடைய எதிரிகள் மற்றும் பகைவர்களிடம் உனக்காக பகைமை காட்டுபவர்களாகவும் எங்களை ஆக்குவாயாக.

அல்லாஹ்வே! இது எங்களுடைய பணிவான துஆவாகும். இதை ஒப்புக் கொள்வது உன்னை சார்ந்தது.

அல்லாஹ்வே! ஆகவே இந்த துஆதான் எங்களுடைய எல்லா உழைப்பு மற்றும் திட்டங்களாகும். மேலும் உனது இருப்பின் மீதே நம்பிக்கை வைத்துள்ளேன்.

அல்லாஹ்வே! எனக்காக என்னுடைய உள்ளத்தில் ஒளியை உருவாக்குவாயாக. என்னுடைய மண்ணறையையும் ஒளிமயமானதாக ஆக்குவாயாக. எனக்கு முன்னும் பின்னும் ஒளிமயமாக்குவாயாக. என்னுடைய வலப்புறத்தையும் ஒளிமயமாக்குவாயாக. என்னுடைய இடப்புறத்தையும் ஒளிமயமாக்குவாயாக. மேலும் எனக்கு மேலேயும், கீழேயும் ஒளிமயமாக்குவாயாக. மேலும் எனது கேட்கும் திறனிலும் ஒளியை நிரப்புவாயாக. எனது பார்வையிலும் ஒளியை நிரப்புவாயாக.

மேலும் எனது முடிகளிலும் ஒளியை நிரப்புவாயாக. என்னுடைய தோளிலும் ஒளியை நிரப்புவாயாக. என்னுடைய சதையிலும், இரத்தத்திலும் ஒளியை நிரப்புவாயாக. மேலும் என்னுடைய சிந்தனையிலும் ஒளியை நிரப்புவாயாக. மேலும் என்னுடைய எலும்பிலும் ஒளியை நிரப்புவாயாக.

அல்லாஹ்வே! எனது உள்ளத்தில் ஒளியின் மகத்துவத்தை உருவாக்குவாயாக. பிறகு எனக்கு அந்த ஒளியை வழங்குவாயாக. மேலும் என்னை ஒளியின் பிறப்பிடமாக ஆக்குவாயாக. சான்றாண்மையின் அழகிய ஆடைகளோடு கண்ணியத்துடன் நிலைபெற்றுள்ள அவன் தூயவன். மேலும் அவன் தூயவன். அவனைத் தவிர வேறு எவரது தூய்மையையும் எடுத்துக் கூறுவது பொருத்தமானதல்ல. அவன் தூய்மையானவனும், வளமும், அருளும் நிறைந்த அந்த இறைவன் தூயவன். அவனது இருப்பு

தூய்மையானது. அவன் கண்ணியத்திற்கும், சான்றாண்மைக்கும் உரியவன் ஆவான். மேலும் அவன் தூயவன். அவன் கம்பீரமும், கண்ணியமிக்கவனும் ஆவான்.

(சுனன் திர்மிதி, அப்வாபுத் தஃவாத், பாபு அல்லாஹூம்ம இன்னீ அஸ்அலுக.... ஹதீஸ் எண் 3419)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய துஆக்களை கூறுகின்றேன். அன்னார் தனது ஒரு சஹாபி சவுத்ரி ருஸ்தம் அலி சாஹிபிற்கு எழுதிய கடிதத்தில் இந்த துஆவை குறிப்பிடுகின்றார்கள். இது அரபி துஆவாகும்.

يَامَنْ هُوَ اَحَبُّ مِنْ كُلِّ مَحْبُوْبٍ اِغْفِرْلِيْ وَتُبْ عَلَيَّ وَاَدْخِلْنِيْ فِيْ عِبَادِكَ الْمُخْلَصِيْنَ

அதாவது எல்லா அன்பிற்குரியவர்களை விடவும் அதிகமாக அன்பு காட்டத் தகுந்தவனே! என்னை மன்னிப்பாயாக. என்மீது கருணையை பொழியச் செய்வாயாக. மேலும் என்னை உன்னுடைய கலப்பற்ற அடியார்களோடு சேர்ப்பாயாக. நாங்கள் உன்னுடைய பாவம் மிகைத்த அடியார்கள் மற்றும் மன இச்சைகளால் மிகைத்தவர்கள் ஆவோம். நீ எங்களை மன்னிப்பாயாக. மேலும் மறுமையின் துன்பத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக.

(அல் ஹகம் 10 ஆகஸ்ட் 1901 ஆம் ஆண்டு, தொகுதி 5 பக்கம் 9 நம்பர் 29 – பதர் 26 ஜுலை 1906 ஆம் ஆண்டு, தொகுதி 2 பக்கம் 3 இதழ் 30)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அன்னார் தமது ஒரு கடிதத்தில் இந்த துஆவை எழுதியுள்ளார்கள். இதன் பக்கம் கவனமூட்டினார்கள்.

என்னுடைய பேரருள் பாலிப்பவனே! எனது இறைவனே! நான் உனது ஒன்றுமற்ற அடியானாகவும், பாவம் செய்த மற்றும் கவனமற்ற அடியானாகவும் இருக்கின்றேன். நான் அநீதிக்கு மேல் அநீதி இழைத்துக் கொண்டிப்பதை நீ பார்த்தாய். அவ்வாறிருந்தும் அருளுக்கு மேல் அருள் புரிந்தாய். மேலும் நீ என்னை பாவத்திற்கு மேல் பாவம் செய்வதை பார்த்தாய். மேலும் என்மீது கருணைக்கு மேல் கருணை காட்டினாய்.

நீ எப்போதும் எனது பாவங்களை மறைக்கவே செய்தாய். மேலும் உனது எண்ணற்ற அருள்களிலிருந்து எனக்கு வழங்கினாய். எனவே இப்போதும் ஒன்றுமற்ற மற்றும் பாவியான என்மீது கருணை காட்டுவாயாக. எனது வெட்கமற்ற நிலையையும், எனது நன்றிகேட்டையும் மன்னிப்பாயாக. மேலும் என் கவலையிலிருந்து எனக்கு விடுதலை அளிப்பாயாக. உன்னைத்தவிர வேறு யாராலும் அதை அகற்ற முடியாது. ஆமீன்

(மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 2 பக்கம் 10, முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா ஹகீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம், கடிதம் எண் 2)

இறைவனில் தம்மை மாய்த்து விடுவதற்கான துஆவை அன்னார் கற்றுத் தந்துள்ளார்கள்.

எல்லா உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவனே! என்னால் உனது கருணைக்கு நன்றி செலுத்த முடியாது. நீ மிகவும் கருணை காட்டுபவனும் கண்ணியமானவனும் ஆவாய். உன்னுடைய அளவில்லாத அருட்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நான் அழிந்து விடாமல் இருப்பதற்கான நீ எனது பாவங்களை மன்னிப்பாயாக. என் உள்ளத்தில் உன்மீதான கலப்பற்ற அன்பை உருவாக்குவாயாக. அதன் மூலம் எனக்கு வாழ்வு கிடைக்க வேண்டும். மேலும் என்மீது திரையிடுவாயாக. நீ திருப்தியடைகின்ற நற்செயல்களை செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவாயாக. நான் உன்னுடைய கண்ணியமிக்க பொலிவுகள் மூலமாக உன்னுடைய கோபம் என்மீது வெளிப்படுவதிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். என்மீது கருணை கருணை காட்டுவாயாக. என்மீது கருணை கருணை காட்டுவாயாக. இம்மை மற்றும் மறுமையின் துன்பங்களிலிருந்து என்னை காப்பாயாக. ஏனென்றால் எல்லா வகையான அருள்களும் கண்ணியங்களும் உன் கையிலேயே இருக்கின்றன. ஆமீன்.

(மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 2 பக்கம் 159, ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம், கடிதம் எண் 3)

இப்போது பொதுவாக நாம் இஸ்லாமிய உலகையும் துஆவில் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களிடம் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவானாக. மேலும் பிளவுபட்டுள்ள அவர்களது உள்ளங்கள் இணையட்டுமாக. தமக்கிடையே உள்ள பகைமைகள் முடிவுக்கு வரட்டுமாக. அவர்களது பகைமையிலிருந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கின்ற எதிரிகளின் கைகளை அல்லாஹ் தடுப்பானாக. மேலும் அவர்கள் இஸ்லாத்திற்கு நஷ்டமிழைப்பதிலிருந்து தவிர்ந்திருப்பார்களாக.

அல்லாஹ் எல்லா அஹ்மதி ஆண்களுக்கும், பெண்களுக்கும் தன்னிறைவை வழங்குவானாக. அவர்களை எல்லா விஷமங்களிலிருந்தும் பாதுகாப்பானாக. அவர்களுக்கு உறுதியான பாதத்தை வழங்குவானாக. மேலும் அவர்கள் எப்போதும் ஜமாஅத் அமைப்புடனும், கிலாஃபத் அமைப்புடனும் இணைந்திருப்பார்களாக. மேலும் ஜமாஅத் அமைப்பிற்கும் அவர்களின் உரிமைகளை செலுத்தக் கூடிய வாய்ப்பை வழங்குவானாக.

பொறுப்பாளர்களுக்கு தமது பொறுப்புகளை புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவானாக. வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு அர்ப்பணிப்பின் ஆன்மாவை புரிந்து மார்க்கத் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அல்லாஹ் நம்மை தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்தும் அவனுடைய விஷமத்திலிருந்தும் பாதுகாப்பானாக. அல்லாஹ் முஸ்லிம்களை பலவீனப்படுத்தக்கூடிய அனைவரது கைகளையும் தடுப்பானாக. முஸ்லிம்களை அவர்களின் விஷமங்களிலிருந்து பாதுகாப்பானாக. இன்னும் சொல்வதாயின் அதன் விளைவாக இஸ்லாமிய உலகம் மட்டுமின்றி முழு உலகமுமே பயங்கரமான அழிவு ஏற்படலாம். அல்லாஹ் அந்த அழிவிலிருந்து பாதுகாப்பானாக.

அல்லாஹ் அஹ்மதிய்யத்திற்காக உயிர் தியாகம் செய்தவர்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களுடைய உறவினர்கள், அவர்களுக்கு பின்னால் இருக்கக்கூடியவர்களுக்கு அவனே பாதுகாப்பு வழங்குவானாக. இறை வழியில் கைதானவர்களுக்கு விரைவில் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. அல்லாஹ் சிரமத்தில் இருக்கக்கூடிய இந்த எல்லா மக்களது சிரமத்தையும் அகற்றுவானாக. நோயாளிகளுக்கு ஆரோக்கியத்தை வழங்குவானாக. மேலும் மார்க்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிரச்சனைகளில் சிக்கியிருக்கக்கூடிய குறிப்பாக பல்வேறு நாடுகளிலுள்ள ஜமாஅத் மக்களின் பிரச்சனைகளை எளிதாக்குவானாக. எதிரிகளின் கைகளை அவர்களை விட்டும் தடுப்பானாக.

காதியானின் தர்வேஷ்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். காதியானில் வசிக்கக்கூடிய சில மக்கள் கஷ்டத்தில் இருக்கின்றார்கள். அவ்வாறே பாகிஸ்தானில் உள்ளவர்கள் குறிப்பாக ரப்வாவிலுள்ளவர்களுக்கு இன்றைய நாட்களில் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அவர்களது நிலைமைகளில் பல்வேறு நெருக்கடியை உருவாக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன.

அல்லாஹ் அவர்களையும் அநீதியிழைப்பவர்களிடமிருந்து பாதுகாப்பானாக. அல்லாஹ் அவர்களின் நிலைமைகளை மேம்படச் செய்வானாக.

அதே போன்று இந்தியாவிலும் சில பகுதிகளில் முஸ்லிம்கள் அதிகம் உள்ள இடங்களில் அஹ்மதிகளுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. அல்லாஹ் அந்த அநீதியாளர்களின் கைகளை தடுப்பானாக. இதே போன்று இந்தோனேஷியாவில் இதுவரை எங்கெல்லாம் அநீதியாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதோ அங்கெல்லாம் அஹ்மதிகள் மீது அநீதி இழைக்கின்றார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன் கூட அவர்கள் குறைவான எண்ணிக்கையை கொண்ட ஒரு ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை அவர்களது வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள். அந்த அஹ்மதிகள் வீடற்றவர்களாக ஆகி விட்டார்கள். அல்லாஹ் அவர்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. எதிரிகளின் விஷமங்களிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக.

முஸ்லிம் நாடுகளைப் பற்றி நான் ஏற்கனவே கூறியிருந்தேன். யமனில் இப்போது மீண்டும் கடுமையான தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. ஈராக்கிலும் சிரியாவிலும் கோஷ்டிகளுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரிவுகளுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடுகளின் காரணமாக முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்துக்களையே வெட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்.

அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் எந்த நபியை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களின் உண்மையான போதனையின்படி அமல் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவானாக.

மேலும் இக்காலத்தில் அல்லாஹ் தஆலா தான் அனுப்பிய மஹ்தி மற்றும் மஸீஹை ஏற்றுக் கொள்ளக்கூடிய பாக்கியத்தை வழங்குவானாக. அதன் மூலமாக தவறான பாதையில் செல்வதை விட்டும் அவர்கள் பாதுகாக்கப்படுவார்களாக. மேலும் அவர்களுடைய இம்மையும் மறுமையும் பாதுகாப்பாக இருக்கட்டுமாக.

அவ்வாறே அல்லாஹ் ஜமாஅத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் ஜமாஅத் சந்தாக்களில் பொருள் தியாகம் செய்தவர்களுடைய செல்வத்திலும் உயிரிலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவானாக.

அதே போன்று தப்லீக் பணியில் M.T.A மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அல்லாஹ் M.T.A வின் பணியாளர்களுக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக. முன்பை விட அதிகமாக பணி செய்யக்கூடிய வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக. M.T.A ஆப்ரிக்காவும் தற்போது மிகவும் அதிகமாக தப்லீக் பணியை செய்து வருகிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பணியாற்றக்கூடிய அனைவருமே உள்ளூர் வாசிகளே ஆவர். அல்லாஹ் இவர்களுடைய அறிவிலும், இறைஞானத்திலும் பரக்கத் வழங்குவானாக. அவர்கள் மிகச்சிறந்த நிகழ்ச்சிகளை தயாரித்து இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை தமது சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் கொண்டு செல்பவர்களாவார்களாக. ஆமீன்.

## காதியானிலுள்ள நஷ்ரோ இஷாஅத் (வெளியீட்டுத் துறை) -யில் உள்ள DTP மையத்தில் பணியாற்ற விருப்பமுள்ள பெண் பணியாளர்கள் தேவை

*சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நஸாரத் நஷ்ரோ இஷாஅத்தில் உள்ள DTP -யில் ஒரு கம்பியூட்டர் ஆப்பரேட்டரின் தேவை இருக்கின்றது. இதில் பணியாற்ற விரும்பும் பெண்கள் நஸாரத் தீவானிலிருந்து இதற்கான படிவத்தைப் பெற்று அதை நிரப்ப வேண்டும். பிறகு Attested செய்யப்பட்ட தங்களது அனைத்து கல்விச் சான்றிதழ்களின் நகல்களையும், பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தையும் ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத் தலைவர், லஜ்னா தலைவி ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்துடன் நஸாரத் தீவானிற்கு இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.*

1. பணியாற்ற விரும்புபவர் குறைந்தபட்சம் 12 –ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அதில் Second Division –ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. ஹிந்தி, உருது ஆகிய மொழிகளை எழுதுவதற்கும் படிப்பதற்கும் தெரிந்திருக்க வேண்டும்.
3. ஹிந்தி, உருது டைப்பிங் செய்வதில் திறமை பெற்றவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அதில் ஒரு வருட கால அனுபவம் இருக்க வேண்டும். Keyboard –ஐப் பார்க்காமலேயே கம்போஸ் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மணி நேரத்தில் குறைந்தபட்சம் 300 சொற்களை அவரால் டைப் செய்ய முடிய வேண்டும்.
4. ஹிந்தி டைப்பிங்கை In-Design Software –ல் Chanaky - Unicode ஃபாண்டில் செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.
5. Computer Science -ல் டிப்ளமா படித்திருக்க வேண்டும்.
6. In-Design, MS Word, Inpage பற்றிய அடிப்படையான விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.
7. வக்ஃபே ஸிந்தகீ அல்லது வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள உறுப்பினர்கள் தங்களது வக்ஃபே நவ் தொடர்பான எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.
8. விண்ணப்பத்தில் தனது தந்தை / கணவர் / காப்பாளர் ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்தும் இடம்பெற்றிருக்க வேண்டும்.
9. பணி செய்ய விரும்புபவர் நடைபெறும் நேர்காணல் எந்த தேதியில் நடைபெறும் என்பது பற்றி பின்னர் தகவல் தெரிவிக்கப்படும். நேர்க்காணலிற்காக காதியான் வருவதற்கும் திரும்பிச் செல்வதற்குமுள்ள செலவுகளை பணி செய்ய விரும்பபுவர் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
10. காதியானில் தங்குவதற்கான ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.

(நாஸிர் தீவான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா – காதியான்)

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹே இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

**23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்**

**(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)**

*(24 வது இதழின் தொடர்ச்சி...)*

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

உள்ளூர் அமீர் மீது மிகப்பெரிய பொறுப்பு இருக்கின்றது. அமீர்மார்களின் நிலையே இவ்வாறாக இருந்தால் பிறகு சிறு சிறு ஜமாஅத்துகளின் தலைவர்களுடைய நிலையைப் பற்றி நாம் என்ன கூறவேண்டியது இருக்கின்றது? அது அதை விட மோசமானதாகத்தான் இருக்கும்.

இதற்குப் பிறகு கால்சுரே ஜமாஅத்தடைய தலைவர் அவர்கள் தமது ஜமாஅத்தின் செயற்குழு செயல் துடிப்புள்ள செயற்குழுவாக இல்லை என்று கூறினார்கள். பிறகு இந்த வருடம் அவருக்கு ஒரு புதிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். அவர்களது ஜமாத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 120 என்றும் கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

செயற்குழு செயல் துடிப்புள்ளதாக இல்லையென்றால் அது தொடர்பாக நீங்கள் தலைமையகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும். உங்களுக்கு இந்த வருடம் பொறுப்பு கிடைத்திருக்கின்றது என்று கூறினீர்கள். இந்த வருடத்தில் இப்போது 8 அல்லது 9 மாதங்கள் கடந்து விட்டன. உங்களுடைய ஜமாஅத்திலுள்ள பொதுச் செயலரை நீங்கள் செயல்படக்கூடியவராக ஆக்க வேண்டும். அவர் தொடர்ந்து அறிக்கைகளை அனுப்பி வைக்க வேண்டும்.

இது ஜமாஅத் தலைவர்களின் பணியாகவும் இருக்கின்றது. மேலும் இது ஜமாஅத்துகளின் அமீர்களுடைய பணியாகவும் இருக்கின்றது. அதாவது அவர்கள் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஒரு ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

எனக்கு 27 வயது தான் ஆகின்றது. ஆனால் என்னுடைய செயற்குவில் அன்ஸார் சகோதரர்களும் இருக்கின்றனர். ஆனால் அந்த அன்ஸார்கள் மிகவும் சோம்பேறிகளாக இருக்கின்றனர் என்று கூறினார்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

தப்லீக் மற்றும் தர்பிய்யத் ஆகிய பணிகள் அடிப்படையான பணிகளாக இருக்கின்றன. அவர்கள் அந்த பணியை செய்யவில்லை என்றால், வேறு எந்த பணியைத்தான் அவர்கள் செய்யப் போகின்றார்கள்? தப்லீக் மற்றும் தர்பிய்யத் ஆகிய இந்த இரண்டு துறைகள் செயல் துடிப்புள்ள துறைகளாக ஆகிவிட்டால் மற்ற அனைத்து துறைகளும் தாமாகவே செயல் துடிப்புள்ள துறைகளாக ஆகிவிடும்.

உமூரே ஆமாவுடைய துறையில் எழுகின்ற பிரச்சனைகளுக்கும் தீர்வு ஏற்பட்டு விடும். கஸாவிலுள்ள பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு விடலாம். செல்வத்தை நாம் ஒன்று திரட்ட வேண்டிய தேவையும் இருக்காது. செல்வமும் தானாகவே கிடைத்து விடும்.

ஏனென்றால் ஓர் அஹ்மதிக்கு சரியான தர்பிய்யத்தை நாம் வழங்கி விட்டால் அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் என்ன? என்பதைப் பற்றிய உணர்வு அவருக்கு ஏற்பட்டு விட்டால், அதை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதைப் பற்றி அவர் தெரிந்திருந்தால், பிறகு மக்கள் தாமாகவே செயல் துடிப்புள்ளவர்களாக ஆகி விடுவார்கள். ஆனால் செயற்குழு சோம்பேறித்தனமாக செயல்படக் கூடியதாக இருந்தால் பிறகு எஞ்சியுள்ள மக்களைப் பற்றி நாம் என்ன கூற முடியும்?

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இருப்பினும் நீங்கள் அஞ்ச வேண்டிய தேவையில்லை. நீங்கள் ஜமாஅத்துடைய தலைவராக இருந்தால் நீங்கள் அந்த அன்ஸார் சகோதரர்களிடமிருந்து வேலை வாங்க வேண்டும். சிறியவர்களிடமும் வேலை வாங்க வேண்டும். நான் பார்த்திருக்கின்றேன். குத்தாமுல் அஹ்மதிய்யாவிடம் பணி செய்கின்ற உணர்வு அதிகமாக இருக்கின்றது. அவர்களிடமிருந்து அறிக்கைகளும் வந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் அன்ஸார் சகோதரர்களே சோம்பேறிகளாக இருக்கின்றனர்.

தப்லீச் செயலர்:

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தப்லீக் செயலரிடம் இவ்வாறு கூறினார்கள்:

நீங்கள் பிரசுரங்கள் வழங்குவது தொடர்பான அறிக்கையைத் தந்துள்ளீர்கள்.

அதாவது இவ்வளவு லட்சம் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அந்த பணியும் நடைபெறத்தான் செய்திருக்கின்றது. ஆனால் எவர்கள் இந்த பணியை ஆரம்பானபோது பிரசுரங்கள் விநியோகம் செய்ய வந்தார்களோ, அதாவது முதல் நாளில் யார் பிரசுரம் வழங்க வந்தார்களோ, அவர்கள் தாம் இன்றும் கூட பிரசுரங்கள் வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இந்த பிரசுரங்களை விநியோகம் செய்பவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கும்படி செய்திருக்க வேண்டும். அவ்வாறு எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றதா? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு தப்லீக் செயலர் அவர்கள், இப்போது 5000 ற்கும் அதிகமான நபர்கள் பிரசுரங்களை வழங்குகின்ற இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறினார்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இங்குள்ள குத்தாம் எண்ணிக்கை 10,000 ஆகும். அன்ஸார் எண்ணிக்கை 5000 ஆகும். இருவரையும் சேர்த்தால் 15,000 பேர் இருக்கின்றார்கள். இந்த பணியில் லஜ்னாக்கள் கூட ஓரளவு ஈடுபடத்தான் செய்கின்றார்கள். இங்குள்ள பெண்களின் எண்ணிக்கை 13,000 ஆகும். ஆக, ஒட்டு மொத்தமாக 28,000 பேர் இருக்கின்றார்கள்.

இவர்களில் 5000 பேர் மட்டுமே பிரசுரம் விநியோம் செய்கின்ற இந்த பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களும் கூட

சில நேரங்களில் வருகின்றனர். சில நேரங்களில் வராமலும் இருக்கின்றனர். தாயிஹீனே இலல்லாஹ் அதாவது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற இந்த பணியை நிரந்தரமாகச் செய்யக் கூடியவர்கள் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் பிரசுரங்களை வழங்குகின்ற இந்த பணியிலாவது அனைவரையும் ஈடுபடுத்த வேண்டும்.

அதன் மூலமாக ஒவ்வோர் அஹ்மதிக்கும் இந்த உணர்வு ஏற்பட வேண்டும். நாமும் தப்லீக்கில் பங்கு பெற வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் ஏற்பட வேண்டும். இங்கு ஜெர்மனியில் 3500 வக்ஃபே நவ் அதாவது ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்திருக்கின்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இவர்களில் 25 வயதிற்கு மேலுள்ளவர்கள் 2000 பேர் இருக்கின்றனர். இவர்களையும் இந்த பணியில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு ஈடுபடுத்தினால் இந்த பணியை விரிவாகவும் சிறந்த முறையிலும் செய்ய முடியும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தப்லீக் செயலரிடம் கூறினார்கள்:

இந்த வருடம் 15 லட்சம் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. 5000 பேர் இந்த பிரசுரங்களை வழங்கியிருக்கின்றனர் என்றால் ஒரு நபருக்கு 300 பிரசுரங்கள் என்ற விகிதம் வருகின்றது. நீங்கள் இந்த பிரசுரங்களை விநியோகம் செய்பவர்களின் எண்ணிக்கையை 10,000 வரை கொண்டு சென்று விட்டால் பிறகு பிரசுரங்களின் எண்ணிக்கை 3 மில்லியனை எட்டிவிடும்.

வக்ஃப் செய்திருப்பவர்கள், குத்தாம்கள், அன்ஸாருல்லாஹ்வில் முதல் அணியில் உள்ள அன்ஸார், இரண்டாவது அணியிலுள்ள அன்ஸார் ஆகியோரையும் இந்த பணியில் ஈடுபடுத்தினால், மேலும் நிரந்தரமான முறையில் அவர்கள் இந்த பணியைச் செய்து வந்தால் இந்த எண்ணிக்கை குறைந்தபட்சம் 10,000 ஐ எட்டிவிடும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்டதற்கு ஏற்ப தப்லீக் செயலர் அவர்கள், ஜெர்மனியின் மொத்த மக்கள் தொகை 80 மில்லியன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இங்குள்ள மக்கள்தொகை 80 மில்லியன் என்றால் இப்போது 5.1 மில்லியன் மக்களுக்குத் தான் இந்த பிரசுரங்களை வழங்கியிருக்கின்றீர்கள். இதன் பொருள் என்னவென்றால், ஜெர்மனியிலுள்ள எல்லா மக்களுக்கும் இந்த பிரசுரங்கள் சென்று சேர்வதற்கு 50 அல்லது 60 வருடங்கள் ஆகிவிடும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நான் இந்த விஷயத்தையும் கூறியிருக்கின்றேன். அதாவது ஓரிடத்தில் நீங்கள் ஒரு பிரசுரத்தை தொடர்ந்து விநியோகம் செய்து வந்தால் அங்கு சில நாட்களுக்குப் பிறகு ஜமாஅத்தை அறிமுகப்படுத்துகின்ற வேறொரு பிரசுரமும் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் ஒருமுறை மட்டும் நாம் ஜமாஅத்தை அறிமுகப்படுத்தி விட்டால் அதற்குப் பிறகு மக்கள் அதனை மறந்து விடுகின்றனர்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இந்த விஷயத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

நீங்கள் அஹ்மதிகளாக இருக்கின்றீர்கள். கிலாஃபத்திடம் பைஅத் செய்திருக்கின்றீர்கள். பைஅத்திற்கான தொடர்பும் உங்களிடம் இருந்து வருகின்றது. நீங்கள் என்னுடைய குத்பாக்களையும் கேட்கின்றீர்கள். மாநாடுகளில் நான் நிகழ்த்துகின்ற சொற்பொழிவுகளையும் கேட்கின்றீர்கள். ஜுமுஆ பேருரையையும் கேட்கின்றீர்கள். ஒரு குத்பாவில் நான் என்ன போதனை செய்கின்றேனோ அதனை அடுத்த குத்பா வருவதற்கு முன்னதாக நீங்களே மறந்து விடுகின்றீர்கள்.

அவ்வாறிருக்கும் போது, இவர்களோ அஹ்மதிகள் இல்லை. கிறித்தவர்களாக இருக்கின்றார்கள். அல்லது இவர்களில் மார்க்கத்தின் மீது ஆர்வம் இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். அவர்களிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்க முடியும்?

ஒரு பிரசுரத்தையோ அல்லது புத்தகத்தையோ வழங்கிவிட்டு பிறகு சிறிது காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு மீண்டும் நினைவூட்டினால் அவர்களுக்கு இந்த ஜமாஅத் தொடர்பாக என்ன நினைவு இருக்கப் போகின்றது?

அப்போது தப்லீக் செயலர் அவர்கள் கூறினார்கள். நமது வழிமுறை இவ்வாறுதான் இருந்து வருகிறது. அதாவது ஒரு பிரசுரத்தை கொடுத்த பிறகு அடுத்த பிரசுரத்தை நாங்கள் விநியோகம் செய்கின்றோம்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவரிடம், ஒரு பிரசுரத்தை கொடுத்த பிறகு அடுத்த பிரசுரத்தை கொடுப்பதற்கு இடையில் எவ்வளவு கால இடைவெளி இருக்கின்றது என்று கேட்டார்கள்.

அதற்கு தப்லீக் செயலர், ஒரு பிரசுரத்தை கொடுத்த பிறகு ஏறக்குறைய ஒரு வருடம் கழிந்த பிறகே அடுத்த பிரசுரம் கொடுக்கப்படுகின்றது என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இவ்வாறு நடைபெறுவதற்குக் காரணம் என்னவென்றால், உங்களிடம் அதிகமான மக்களை இந்த பணியில் ஈடுபடுத்துவதில் குறை இருக்கின்றது. மனித ஆற்றல் குறைவாக இருக்கின்றது. எனவே எல்லா மக்களையும் இந்த பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறு, இந்த பணியில் ஈடுபடுகின்ற மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்படி செய்யவும் முடிவும். மக்களது எண்ணிக்கையை அதிகப்படுத்துங்கள். ஒவ்வோர் அஹ்மதியையும் இந்த பணியில் நீங்கள் ஈடுபடுத்தினால் அல்லது இந்த பணியில் நாம் ஈடுபட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டால், இதன் மூலமாக தர்பிய்யத்திலும் மிகச்சிறந்த நிலை உருவாகும். அதாவது இவ்வாறு தப்லீக் செய்கின்ற மக்களிடம் ஒரு தைரியம் ஏற்பட்டு விடும்.

நாம் இந்த பிரசுரங்களை வழங்குவதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பிரதிநிதிகளாகச் செயல்படுகின்றோம். மக்கள் இந்த பிரசுரங்களைப் பெறுகின்ற போது, ஒன்று அதனை வாங்கிப் படிப்பார்கள் அல்லது எதிர்ப்பார்கள்.

இரு நிலையிலும் நம்மிடம் ஒரு தைரியம் உருவாகும். நம்மிடம் என்னென்ன பொறுப்புகள் உள்ளன என்பதைப் பற்றிய ஓர் உணர்வு உருவாகும். இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தப்லீக்கில் நாம் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நான் இன்றிலிருந்து 5 வருடங்களுக்கு முன்னதாகவே ஒரு செயல்திட்டத்தைக் கூறியிருந்தேன். அதாவது அடுத்த 10 வருடத்திற்குள் நாம் ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் ஜமாஅத்தை அறிமுகம் செய்திருக்க வேண்டும் என்பதே அந்த திட்டமாக இருந்தது. ஜெர்மனியில் எங்கெல்லாம் பள்ளிவாசல் கட்டப்படுகிறதோ அங்கு ஜமாஅத் பற்றி பெரிய அளவில் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் இல்லாமல் இருக்கின்றது.

எனவே பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்ற இடங்களிலேயே ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் இல்லாமல் இருக்குமென்றால் பிறகு எஞ்சியிருக்கின்ற இடங்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்?

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

முதலில் நீங்கள் பார்க்க வேண்டியது, எந்த பகுதியில் அதிகமாக மக்கள் குடியேறியிருக்கின்றார்களோ, அந்த இடங்களில் அதிகமாகத் தப்லீக் செய்ய வேண்டும். ஒரு முறை இந்த இடத்திற்கு நீங்கள் சென்ற பிறகு மற்ற மாநிலங்களுக்கும், பகுதிகளுக்கும் நீங்கள் செல்ல வேண்டும். பிறகு மிக நுட்பமான முறையில் தப்லீக் செய்ய வேண்டும்.

உங்களிடம் எந்த அளவு மனித ஆற்றல் அதாவது எந்த அளவு இந்த பணியில் ஈடுபடக்கூடிய மக்கள் இருக்கின்றார்களோ, எந்த அளவுக்கு குத்தாம் மற்றும் அன்ஸார் இருக்கின்றார்களோ அவர்களை அனைவரையும் இந்த பணியில் ஈடுபடுத்த வேண்டும். இதற்குப் பிறகு தப்லீக் செயலர் அவர்கள், நாங்கள் நீங்கள் கூறுவது போன்று தான் செய்து வருகின்றோம் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

ஆனால் என்ன விளைவு ஏற்பட வேண்டுமோ அது ஏற்படவில்லை. நீங்கள் இதுவரை கடந்த 5 வருடங்களில் 6 மில்லியன் மக்கள் வரை இந்த பிரசுரங்களை எட்ட வைத்துள்ளீர்கள். 6 மில்லியன் என்பது ஜெர்மனியின் மொத்த மக்கள் தொகையில் 8 சதவிகிதம் மட்டுமே ஆகும்.

எனவே 10 வருடங்களில் நாம் இந்த தூதுச் செய்தியை முழுமையாக எட்ட வைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கின்றோம் என்றால் 5 வருடங்களில் 50 சதவிகிதம் மக்களுக்கு இந்த தூதுச் செய்தி சென்று சேர்த்திருக்க வேண்டும். அதாவது கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் ஜெர்மனியின் 50 சதவிகிதம் மக்களுக்காவது இந்த தூதுச் செய்தி சேர்ந்திருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லையென்றால் குறைந்தபட்சம் 30 சதவிகிதம் பேருக்காவது இந்த தூதுச் செய்தி சென்று சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்:

உங்களிடத்தில் இப்பணியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை ஒரு எல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. இதைப் பற்றி நான் ஆய்வு செய்து பார்த்த போது, எந்த மக்கள் இந்த பணியில் ஈடுபடாமல் இருக்கின்றார்களோ அவர்களில் சிலருக்கு ஜமாஅத்திலுள்ள தலைவர்களிடம் அல்லது உள்ளூர் ஜமாஅத்தின் அமைப்பு மீது வெறுப்பு இருக்கின்றது.

அல்லது ஜமாஅத்தின் அமீர் மீது அவர்களுக்கு வெறுப்பு இருக்கின்றது. அல்லது ஜமாஅத்தின் செயற்குழுவின் மீதே அவர்களுக்கு வெறுப்பு இருக்கின்றது. ஒருவருக்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவிலுள்ள பொறுப்பாளர்கள் மீது வெறுப்பு இருக்கின்றது. சிலருக்கு அன்ஸாருல்லாஹ்விலுள்ள பொறுப்பாளர்கள் மீது வெறுப்பு இருக்கின்றது. அவர்களிடம் எப்போது கேட்டாலும் இவ்வாறு தான் பதில் கூறுகின்றார்கள். இந்த நபர் என்னிடம் இவ்வாறு நடந்து கொண்டார்.

இவர் இவ்வாறு செய்ததன் காரணமாகத்தான் நான் பின்வாங்கிச் சென்று விட்டேன். என்னால் இந்த பணியை செய்ய முடியாமல் போய்விட்டது என்று அவர் கூறுகின்றார்.

எனவே ஜமாஅத் பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாஅத் தலைவர்கள் மற்றும் செயற்குழுவிலுள்ள பொறுப்பாளர்களின் பணி என்னவென்றால் அவர்கள் ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அன்புடனும் நேசத்துடனும் அவர்களைத் தங்கள் அருகில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது திகிலை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும் அல்லது தனது தாக்கத்தை அவர்களிடம் வெளிப்படுத்த வேண்டும் என்ற நிலையே இருக்கக்கூடாது.

மிகவும் அன்பாகவும் நேசத்துடனும் அவர்களை அருகில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதுதான் சரியான வழிமுறையாகும். இதன் மூலமாக சரியான முறையில் நீங்கள் மக்களுக்கு தர்பிய்யத் வழங்க முடியும். தப்லீக்கின் களத்திலும் இதன் மூலமாகவே நீங்கள் முன்னேறிச் செல்ல முடியும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்டதற்கு இணங்க தப்லீக் செயலர், இந்த வருடம் ஜெர்மனியில் 126 பைஅத்துகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றில் 59 பேர் அரபு நாட்டைச் சார்ந்தவர்கள். 32 பேர் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள் என்று கூறினார்கள்.

(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)

## உங்களது குழந்தைகளின் சிறந்த தர்பிய்யத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்துங்கள்

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கூற்றுகளிலிருந்து...)

**உங்களது குழந்தைகளின் சிறந்த தர்பிய்யத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்துங்கள். அவர்களிடம் சிறந்த முன்மாதிரியை காட்டுங்கள். இன்னும் சில நாட்களில் புனித ரமலான் மாதம் ஆரம்பமாக உள்ளது இன்ஷா அல்லாஹ். இது நன்மை மற்றும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கான சிறந்த வழியாகும். இதில் இறைவணக்கம் மற்றும் நன்மையான பணிகளை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.**

**எவர்கள் மீது நோன்பு கடமையோ அவர்கள் நோன்பு வைக்காமல் இருப்பதற்கு எந்த சாக்குப் போக்கும் கிடையாது. கடமையான தொழுகைகள் மற்றும் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுங்கள். மேலும் துஆக்களின் பக்கம் அழுத்தம் கொடுங்கள். திருக்குர்ஆனை அதிகம் அதிகமாக ஓதுங்கள். திருக்குர்ஆனை குழந்தைகள் முழுமையாக ஓதும்படி செய்யுங்கள். மேலும் இந்த நல்ல விஷயங்களை புனித ரமலானிற்குப் பிறகும் தொடரச் செய்யுங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதனை அமல் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.** (பத்ர் வாரப் பத்திரிகை 8 டிசம்பர் 2016 பக்கம் 2)

(அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் – தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி காதியான்)

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 19 July 2018 Issue No. 29

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இறைவன் கிடைப்பதற்குரிய பெரும் கருவூலமாக இருக்கின்றான். நீங்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் அவன் உங்களுக்கு உதவி புரிகின்றவனாயிருக்கின்றான். எனவே அத்தகைய இறைவனுக்கு மதிப்பளியுங்கள். அவனில்லாமல் நீங்கள் ஒரு பொருட்டல்ல. உங்களது வழிவகைகளும் திட்டங்களும் ஒன்றுமற்றவையாகும்.

நீங்கள் உலகப் பொருள்கள் மீது முற்றிலும் சார்ந்திருக்கின்ற பிற சமுதாயத்தினரை ஒருபோதும் பின்பற்றாதீர்கள். பாம்பானது மண்ணைத் தின்பது போல் அவர்கள் உலகின் அற்பப் பொருள்களையே தின்றுள்ளனர். கழுகுகளும் நாய்களும் பிணங்களைத் தின்பது போல் அவர்களும் உலக இச்சை என்னும் பிணங்களையே கவ்விப் பிடித்துள்ளனர். அவர்கள் இறைவனை விட்டும் வெகுதூரம் சென்று விட்டனர். அவர்கள் மனிதர்களைத் தெய்வமாக மதித்து வணங்கினர். பன்றியைத் தின்றனர். மதுவைத் தண்ணீரைப் போல் அருந்தினர். அவர்கள் அளவுக்கு மீறி உலகப் பொருட்கள் மீது விழுந்ததாலும் இறைவனிடமிருந்து உதவி தேடாததாலும் மரணித்து போயினர்.

ஒரு புறாவானது தனது கூட்டிலிருந்து பறந்து செல்வதைப் போல் அவர்களிடமிருந்து ஆன்மீக ஆவி பறந்து போய் விட்டது. அவர்களை உலக இச்சை என்னும் தொழு நோய் பீடித்திருக்கின்ற காரணத்தால் அவர்களின் அகத்தின் எல்லா ஆன்மீக உறுப்புகளையும் அது அரித்து விட்டது.

ஆகவே நீங்கள் இத்தகைய தொழுநோய்க்கு பெரிதும் அஞ்சுங்கள். எனினும் நியாயமான அளவில் ஒரு வரம்பிற்குள் நின்று கொண்டு உலகப் பொருள்களினால் பலன் அடைவதிலிருந்து உங்களை நான் தடை செய்யவில்லை. ஆனால் பிற சமுதாயங்களைப் போல் வெறும் உலகப் பொருட்களுக்கு அடிமையாவதையும் அப்பொருள்களையெல்லாம் தந்து உதவக்கூடிய அவ்விறைவனை மறப்பதையுமே நான் தடை செய்கிறேன்.

உங்களுக்கு கண்கள் இருக்குமானால் எங்கும் இறைவனே நின்று விளங்குகின்றான் என்பதையும் மற்றவையெல்லாம் பொருள் அற்றவை என்பதைனையும் நீங்கள் கண்டு கொள்வீர்கள். அவனது ஆணையின்றி உங்களது கைகளை நீட்டவோ மடக்கவோ உங்களால் ஒருபோதும் முடியாது. உயிரற்ற ஒருவன் அவனைக் கண்டு நகைப்பான். ஆனாலும் அந்தோ பரிதாபமே! அவன் மரணித்து மறைந்து போய் விட்டால் இந்த நகைப்பை விட அவனுக்கு பெரும் நன்மையாக இருந்திருக்குமே!

எச்சரிக்கையாயிருங்கள்! உலக விஷயங்களில் மிக முன்னேற்றம் அடைந்த பிற சமுதாயங்களைக் கண்டு நாமும் அவர்களைப் பின்பற்றலாம் (என) நினைக்காதீர்கள். கேளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள். அவர்கள் உங்களைத் தன் பக்கம் அழைக்கின்ற அவ்விறைவனை முற்றிலும் அறியாதவர்களாகவும் அவனைப் பற்றிய சிறிதும் கவலை இல்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

அவர்களின் இறைவன் யார்? ஒரு பலவீனமான மனிதனே அவர்களின் இறைவனாவான். இதன் காரணத்தால் அவர்கள் அலட்சியமாக விடப்பட்டிருக்கின்றார்கள். நான் உங்களை உலகச் சம்பாத்தியத்திலிருந்தோ அல்லது உலகில் தொழில், வியாபாரம் செய்வதிலிருந்தோ தடை செய்யவில்லை. ஆனால் எல்லாம் இவ்வுலகமே நம்பியிருப்பவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்றே நான் கூறுகின்றேன்.

உங்களின் ஒவ்வொரு செயல்களிலும் அவை உலக விஷயங்களாகவோ மார்க்க விஷயங்களாகவோ இருந்தாலும் அவற்றிற்காக இறைவனிடம் சக்தியும் உதவியும் தேடக்கூடிய பழக்கம் உங்களில் எப்போதும் இருந்து வர வேண்டியது அவசியமாகும்.

ஆனால் இவ்விதம் உதவி தேடுவது வறண்டுபோன உங்களின் உதடுகளைக் கொண்டதாய் மட்டுமில்லாமல் ஒவ்வொரு அருட்கொடையும் வானத்திலிருந்தே இறங்குகின்றது என்ற உண்மையான நம்பிக்கை கொண்டதாக இருக்க வேண்டும்.

உங்களின் ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு கஷ்ட நஷ்டங்களிலும் வேறு வழி முறைகளை நீங்கள் கடைபிடிப்பதற்கு முன் உங்கள் (அறைக்) கதவை அடைத்து விட்டு, இறைவா! எங்களுக்கு வந்திருக்கும் இக்கஷ்டங்களை நீ உனது கருணையால் நீக்கியருள்வாயாக என்று இறைவன் முன்பு சிரம்பணிய வேண்டும். இந்நிலை உங்களிடையே உருவானால் மட்டுமே நீங்கள் உண்மையாளர்களாக ஆக முடியும்.

அப்போது பரிசுத்த ஆவியானது உங்களுக்கு உதவி புரியும். மேலும் மறைமுகமாக ஏதேனும் வழியும் உங்களுக்காக திறக்கப்படும்.

நீங்கள் உங்களது ஆன்மாவின் மீது கருணை காட்டுங்கள். எவர்கள் இறைவனோடுள்ள தொடர்பை முற்றிலும் துண்டித்து விட்டு முழுமையாக இவ்வுலகப் பொருட்கள் மீதே சரிந்து விட்டார்களோ, இறைவனிடமிருந்து சக்தியை பெறுவதற்காக வேண்டி இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் விரும்பினால்) என்று தங்கள் வாயால் கூடச் சொல்வதில்லையோ அவர்களை நீங்கள் ஒருபோதும் பின்பற்றாதீர்கள்.

உங்களது இறைவன் உங்களின் எல்லாத் திட்டங்களுக்கும் உத்திரமாக இருக்கிறான் என்பதனை நீங்கள் அறிந்து கொள்வதற்காக இறைவன் உங்களது கண்களைத் திறப்பானாக. உத்திரம் விழுந்து விட்டால் கம்புகளும், சட்டங்களும் கூரையில் நிலைத்திருக்க முடியுமா? ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது.

உடனே அவை மொத்தமாக விழுந்து விடும். இதனால் பலர் மரணிக்கலாம். இவ்வாறே உங்களது திட்டங்களும் இறைவனது உதவி இல்லாமல் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது.

ஆகவே நீங்கள் அவனிடம் உதவி தேடாவிடில் அவனது ஆற்றலின் துணையை வேண்டக் கூடிய பழக்கம் உங்களில் காணப்படாவிடில் நீங்கள் எவ்வித வெற்றியும் பெற மாட்டீர்கள். இறுதியில் நீங்கள் பரிதாபகரமாய் மரணமடைவீர்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி **19** பக்கம் **21 – 23**)

அடிக்குறிப்பு:– இறைவன் எக்காரியத்தையும் செய்ய முடியாதவன் அல்லன். அவன் அளவற்ற கருணையுடன் நல்லவர்களுடன் நண்பர்களைப் போல் நடந்து கொள்கின்றான் என்று இறைவனது வேதம் துஆவைப் பற்றி இந்த சட்டத்தை நன்கு விவரித்திருக்கிறது. அதாவது, சில சமயம் அவன் தனது விருப்பத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு உமது துஆவைக் கேட்கிறான்.

அல்லாஹ் கூறுகின்றான்: اُدْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ

மேலும் சில சமயம் தனது விருப்பத்தையும் ஏற்கச் செய்ய விரும்புகிறான். அவன் கூறியது போன்று وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ இவ்வாறு செய்யக் காரணம் சில சமயம் மனிதன் நம்பிக்கையிலும் இறைஞானங்களிலும் முன்னேறிடச் செய்வதற்காக அவனது துஆவின்படி அவனோடு இறைவன் நடந்து கொள்கின்றான்.

சில சமயம் தனது விருப்பப்படி அவன் தன்விருப்பத்திற்குரிய சன்மானத்தை வழங்கிடவும் மனிதனது பதவியை உயர்த்திடவும் அவனை நேசிப்பதன் மூலம் நேர்வழியில் அவனை முன்னேறிடச் செய்யும் பொருட்டு இறைவன் அவ்வாறு நடந்து கொள்கிறான். (நூலாசிரியர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad